# அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவைப் பிரிவு, நியமனங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர்களாகிய திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் (நிதி) ஆகியோரால் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அது பிரதிப் பணிப்பாளர் (நிதி) அவர்களினால் மாத்திரம் சான்றுபடுத்தப்பட்டிருந்தது.

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க நிதியத்தின் சொத்துக்கள் நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்பட வேண்டிய போதிலும் இயந்திரங்களும் வாகனங்களும் ஒடுங்குபாக மீதி முறையில் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணியினைச் சுவீகரிப்பதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 76,890,442 தொகைக்காகவும் வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பவற்றை பழுதுபார்ப்பதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 6,992,282 தொகைக்காகவும் ரூபா 5,242,979 கூட்டுமொத்த தொகை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சட்டரீதியான அளவீட்டுக் கல்வி தொடர்பான சர்வதேச அமைப்பிற்கு (OMIL) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய யூரோ 14,200 தொகையான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டுக் கொள்வனவின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 5,512,815 தொகையான பெறுமதி சேர் வரி வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதி கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டிலிருந்த நிலவி வரும் ரூபா 127,343 தொகையான முற்பணங்களை 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

| | கணக்குகளின் விபரம் | பெறுமதி | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூலச் சான்று |
|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் வாகனம் | 198,175,493 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(ii) விபரமான பட்டோலை<br>(iii) சொத்துக்கள் தொடர்பான மீளாய்வு அறிக்கை |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 40 விடயங்களுக்குரிய கொடுப்பனவுகள் | 73,116,524 | பணம் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டு |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| **(அ) அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம்** | |
| (i) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபம் | |
| (I) 2:11 ஆம் உப பிரிவு | நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பயன்படுத்திய எரிபொருள் அளவினை ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (II) 2:12 ஆம் உப பிரிவு | குழாம் வாகனங்களின் எரிபொருள் தாங்கி இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை முழுமையாக நிரப்பப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2009 மே 05 ஆந் திகதி பணிப்பாளர் ஓய்வுபெற்றதன் பின்னர் 2012 யூலை 31 ஆந் திகதி வரை அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீ/எப்/437 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபம் | நிறுவனத்துடன் தொடர்புபட்ட காப்புறுதி உள்ளடக்கம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தின் தலைமை அலுவலக வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வேலியை அகற்றி புதிதாக வேலியை நிர்மாணிப்பதற்கான மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 1,106,518 தொகை கொழும்பு மாவட்ட செயலாளருக்கு 2011 திசெம்பர் 14 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2012 யூன் மாதம் வரை வேலியை நிர்மாணிக்க ஆரம்பித்திருக்கவில்லை. இது தொடர்பாக இரண்டு தரப்பினர்களுக்குமிடையில் எதுவித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. அத்துடன் அப்பெறுமதி பூர்த்திசெய்யப்படாத வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 74,972,312 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 70,255,700 ஆக இருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 4,716,612 முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் உள்நாட்டுக் கொள்வனவுகளின் அடிப்படையில் செலுத்தப்பட்ட வரி ரூபா 5,512,815 தொகையும் பொறியீடு செய்தல் அற்ற வருமானம் ரூபா 237,640 தொகையும் வருமானத்துடன் சேர்க்கப்பட்டதனால் வருமானங்களின் அதிகரிப்பும் ரூபா 2,894,340 தொகையான பங்களிப்பு மற்றும் சமூகக் கட்டணம் என்பன மீளாய்வாண்டில் செலுத்தப்படாமையும் விசேடமாக அதற்காகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டுப் பிரிவு நியமம் மற்றும் சேவை அதிகாரச்சட்டத்தின் 20(i)(அ) மற்றும் 37 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்படவேண்டிய

போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களையும் மெய்மையாய்வு செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் முறையான நடைமுறை திணைக்களத்தில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட உத்தியோகத்தரினால் மெய்மையாய்வு செய்யப்படும் பிரிவு மற்றும் அது தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் பற்றிய விபரம் அந்த உத்தியோகத்தர்களால் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தும் அவற்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான நடைமுறையோ அல்லது உள்ளகப் பரிசோதனையோ இடம்பெறவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

2007 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் திணைக்கள வளவில் புதிய ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 235 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆய்வுகூடத்தையும் தலைமை அலுவலகத்தையும் வெவ்வேறு இடங்களில் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்நிர்மாணத்தின் புதிய மதிப்பீடு ரூபா 1,985 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. 2007 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 4 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அக்காலப்பகுதிக்குள் பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக ரூபா 108.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் இந்த நிர்மாண நடவடிக்கைகள் அடிப்படைத் திட்ட மட்டத்தில் மாத்திரம் காணப்பட்டது.

அச்செலவுகளுள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 2,000,000 மற்றும் மாநகர சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 191,153 என்பவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காததனால் அப்பணம் மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மத்தியில் தற்பொழுது திணைக்களம் அமைந்துள்ள சுற்றாடல் மற்றும் கட்டிடங்களைத் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 2.7 மில்லியனாகும். 2012 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட திருத்த வேலைகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 6 மில்லியனாகும். இதற்கிணங்க புதிய அலுவலகம் மற்றும் ஆய்வுகூடத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தாமையால் நிதியத்தின் நிதி நிலைமை வீழ்ச்சியுறுவதனைத் தவிர்க்க முடியாதிருக்கும்.

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புதிய கட்டிடங்கள் மற்றும் 7 திருத்த வேலைகளுக்காக ரூபா 86 மில்லியன் பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வேலைகளுக்கு மத்தியில் ஒரு திருத்த வேலை தொடர்பாக மாத்திரம் வேலை பூரணப்படுத்தப்படாதிருந்தும் குறிப்பிடத்தக்க அளவான பௌதீக செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. அதற்காகச் செலவுசெய்யப்பட்ட தொகை ரூபா 1.5 மில்லியனாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு மத்தியில் ரூபா 5 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் கணனி வலையமைப்பை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் எதுவித செயல்முன்னேற்றத்தினையும் கொண்டிருக்கவில்லை.

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

மீளாய்வாண்டில் ஆய்வுகூடத்தின் கூரையைத் திருத்தம் செய்வதற்காக ஒரு அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வேறு எந்த நிறுவனங்களிடமிருந்தும் விலை மனுக்கள் கோரப்பட்டிருக்கவில்லை. அந்த நிறுவனம் சமர்ப்பித்த ரூபா 1,998,612 தொகையான மதிப்பீடு மற்றும் மேலும் செய்யப்பட வேண்டியவைகளையும் உள்ளடக்கி ரூபா 3,422,095 தொகையான இரண்டாவது மதிப்பீட்டிற்காக தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் உரிய நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 2,218,175 தொகையான தொடக்க விலைப்பட்டியல் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தகைமையற்ற வேலைப் பரீட்சகரினூடாகச் சான்றுபடுத்தப்பட்டு அதில் ரூபா 1,558,129 செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

நிதியத்திற்கான கூட்டிணைந்த திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டிணைந்த திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அது கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்கியுள்ளதா என்பதனையும் வருடாந்த பாதீட்டிற்கு ஒத்ததாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதனையும் அவதானிக்க முடியாதுள்ளது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்திற்காக வரிசை அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது போதியளவு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவிற்கும் உள்ளபடியான செலவிற்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது திணைக்களத்தின் பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்களின் நிர்வாகம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) பாதீடு

(உ) உள்ளகக் கணக்காய்வு

(ஊ) வாகனக் கட்டுப்பாடு